### டெல்லிக்கு பழனிச்சாமி ஓடுவதற்குப் பெயர்தான் கூட்டணிக்குத் தலைமை தாங்குவதா? இனி இது அ.தி.மு.க. கூட்டணி இல்லை; பா.ஜ.க. கூட்டணி!

# அமலாக்கத் துறையும் - சி.பி.ஐ.யும் சம்மன் அனுப்புவது போல, தொகுதிப் பங்கீட்டுக்கு பழனிச்சாமியை அழைத்திருக்கிறார் அமித்ஷா!

## கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு அறிக்கை!

சென்னை, மார்ச் 21 -

**“டெல்லிக்கு பழனிசாமி ஓடுவதற்குப் பெயர்தான் கூட்டணிக்குத் தலைமை தாங்குவதா? இனி இது அ.தி.மு.க. கூட்டணி இல்லை; பா.ஜ.க. கூட்டணிதான். அமலாக்கத் துறையும் சி.பி.ஐ.யும் சம்மன் அனுப்புவதுபோல, தொகுதிப் பங்கீட்டுக்கு பழனிச்சாமியை அழைத்திருக்கிறார் அமித்ஷா” என்று கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.**

கழக முதன்மைச் செயலாளர் கே.என். நேரு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

டெல்லியில் உள்துறை அமைச்சர் அமித்ஷாவிடம் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்த அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி சென்றிருப்பதைப் பார்க்கும்போது, ஐயா திரைப் படத்தில் வரும் காமெடி காட்சிதான் நினைவுக்கு வருகிறது. நடிகர் வடிவேலுவை வீட்டில் வைத்து அடித்துத் துவைத்து வெளியே அனுப்பும்போது,

**இந்த டீலிங் நமக்குள்ளேயே இருக்கட்டும்!**

“அண்ணே... பிரமாதம். இந்த டீலிங் நமக்குள்ளேயே இருக்கட்டும்” என வடிவேலு பேசும் டயலாக் அப்படியே பழனிசாமிக்கு கச்சிதமாகப் பொருந்தும். இரவு 8.30 மணிக்கே சந்திப்பு நடைபெறும் எனச் சொல்லப்பட்ட நிலையில், 2 மணி நேரமாக அமித்ஷாவின் அழைப்புக்காக காத்திருந்து சந்தித்திருக்கிறார் அடிமை பழனிசாமி.

**ஆதங்கத்தில் அ.தி.மு.க. தொண்டர்கள்!**

தேசிய ஜனநாயகக் கூட்டணிக்குத் தமிழ்நாட்டில் தலைமை அ.தி.மு.க. என்று சொன்னால் அந்த அ.தி.மு.க.வின் தலைமை அலுவலகமான எம்.ஜி.ஆர். மாளிகையில்தானே தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை நடத்துவார்கள். ஆனால், பா.ஜ.க. தலைவர் அமித்ஷா வீட்டில் அல்லவா பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறார் பழனிசாமி. கூட்டணிக்குத் தலைமை தாங்கும் கட்சியின் அலுவலகத்தில் இதுவரை ஒருமுறை கூட தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை நடக்கவில்லை. எடப்பாடி பழனிச்சாமியின் சென்னை ‘செவ்வந்தி இல்லத்தில்’ கூட வேண்டாம். எம்.ஜி.ஆர். ஆசை ஆசையாக உருவாக்கிய ராயப்பேட்டை அலுவலகத்திலாவது கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தக் கூடாதா? அதற்குக்கூடத் திராணி இல்லாமலா இருக்கிறது அ.தி.மு.க.? அவ்வை சண்முகம் சாலையில் இருக்கும் அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தைப் பெரிய திண்டுக்கல் பூட்டைப் போட்டுத் தேர்தல் முடியும் வரை பூட்டி வைத்து விடுங்கள் பழனிசாமி. அ.தி.மு.க.வை இப்படிக் கொண்டு வந்து பழனிசாமி நிறுத்திவிட்டாரே என்றுதான் என்ற அ.தி.மு.க. தொண்டர்களே ஆதங்கத்தில் இருக்கிறார்கள்.


**காத்துக் கிடப்பது எல்லாம் காலக் கொடுமை!**

கூட்டணிக்குத் தலைமை வகிக்கும் கட்சிதான் பா.ஜ.க.வுக்கு இத்தனை இடங்கள், பா.ம.க.வுக்கு இத்தனை இடங்கள், அ.ம.மு.க.வுக்கு இவ்வளவு இடங்கள் என ஒதுக்கி, ஒப்பந்தம் போட வேண்டும். இப்படிதான் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க.வில் காலம் காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் மரபு. ஆனால், கூட்டணியில் அ.தி.மு.க.விற்குக் கூடுதல் இடங்களைக் கொடுங்கள் எனக் கேட்டுப் பெறுவதற்காக எடப்பாடி பழனிசாமி இன்னொரு கட்சியின் தலைவர் அமித்ஷா வீட்டில் காத்துக் கிடப்பது எல்லாம் காலக் கொடுமை.

பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணி தொடர்பாக அமித்ஷாவிடம் பேசுவதற்காக இதுவரை ஐந்து முறையும் கூட்டணி முடிவான பிறகு 4 முறையும் டெல்லி சென்றிருக்கிறார் எடப்பாடி பழனிச்சாமி. தமிழ்நாட்டை அதிக முறை ஆட்சி செய்ததாக மார்தட்டிக் கொள்கிறார்கள். அ.தி.மு.க.வின் பொதுச் செயலாளர் ஒருவர் கூட்டணிப் பேச்சுவார்த்தைக்காக டெல்லிக்கு படையெடுப்பது பழனிசாமி காலத்தில் நடந்த வரலாற்று அதிசயம்!

**அமித்ஷா அ.தி.மு.க.வா?**

கடந்த மூன்று மாதத்தில் மட்டும் 3ஆவது முறையாக டெல்லிக்கு சென்றிருக்கிறார் பழனிசாமி. ஒவ்வொரு முறையும் அமித்ஷாவுடன் ஆலோசித்து



முடிவெடுக்கும் அ.தி.மு.க., அண்ணா அ.தி.மு.க.வா? இல்லை அமித்ஷா அ.தி.மு.க.வா? பழனிசாமி மட்டுமல்ல, கூட்டணியில் இருக்கும் அன்புமணியும் டி.டி.வி. தினகரனும் அமித்ஷாவை சந்திக்கிறார்கள். பழனிசாமிக்கு நாங்கள் கொஞ்சமும் சளைத்தவர்கள் அல்ல என்பதை நேரம் கிடைக்கும் போதெல்லாம் நிரூபிக்கிறார்கள்.

கூட்டணிக் கட்சிகளுக்கு இடங்களைப் பிரித்துக் கொடுக்க வேண்டிய இடத்தில் இருக்க வேண்டிய அ.தி.மு.க., தனது கட்சிக்கு எத்தனை சீட்டுகள் என்பதைக் கூடத் தீர்மானிக்க முடியாமல் டெல்லிக்குச் சென்று அமித்ஷாவின் வீட்டு வாசலில் காத்துக் கிடக்கிறது.

**‘புரட்சித் தமிழரே’ சிரிப்புதான் வருகிறது!**

பழனிசாமி அவர்களே... கடந்த டிசம்பர் 10ஆம் தேதி அ.தி.மு.க.வின் பொதுக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட 2ஆவது தீர்மானம் உங்களுக்கு நினைவு இருக்கிறதா? ‘சட்டமன்றப் பொதுத் தேர்தலையொட்டி அமைக்கப்பட்டுள்ள கூட்டணிக்கு, ‘அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்’ தலைமை தாங்குகிறது! கழகத்தின் தலைமையிலான கூட்டணியில் இடம்பெறும் கட்சிகள் குறித்து முடிவெடுக்கும் முழு அதிகாரத்தை, அ.தி.மு.க. பொதுச் செயலாளர், ‘புரட்சித் தமிழர்’ எடப்பாடி பழனிசாமி அவர்களுக்கு, இப்பொதுக்குழு ஏகமனதாக வழங்குகிறது!’ என்ற அந்தத் தீர்மானத்தின் வரிகளை இப்போது படிக்கும் போது சிரிப்பு தான் வருகிறது. “அப்ப... கடைக்கு ஓனர் டக்ளஸ் அண்ணே இல்லையா? வெளியில இப்படித்தான் சொல்லிக்கிட்டு அலையுறியா?”னு அ.தி.மு.க. தொண்டர்களின் மைண்ட் வாய்ஸ் பழனிசாமிக்கு கேட்கவில்லையா? கூட்டணி முடிவெடுக்கும் அதிகாரத்தைப் பெற்ற அந்தப் புரட்சித் தமிழர்தான் (?) டெல்லியில் அ.தி.மு.க. வின் சீட்டுக்காக மிரட்சியுடன் காத்துக் கிடக்கிறார்.

‘கூட்டணிக்கு அ.தி.மு.க.தான் தலைமை தாங்குகிறது’ எனப் பொதுக்குழு தீர்மானத்தில் சொன்னீர்கள். அந்தத் தீர்மானம் இயற்றிய ஒரு மாதத்தில் பா.ஜ.க. தேர்தல் பொறுப்பாளர் பியூஷ் கோயலைச் சந்தித்து கூட்டணியில் இணைந்தார் தினகரன். அப்படியென்றால் கூட்டணிக்குத் தலைமை தாங்கும் அ.தி.மு.க. என்ன ஆனது? அதற்கு எந்த ரோலும் இல்லையா? “இனிமே உன் பேர் தீப்பொறி திருமுகம் இல்லை. ரத்தத் திருமுகம் தான்” என்ற வடிவேலுவின் நிஜப் பாத்திரமாகவே மாறிவிட்டார் பழனிசாமி.

**சம்மன் கூட்டணியா?**

கூட்டணி அமைப்பது குறித்து முடிவெடுக்க பழனிசாமிக்கு முழு அதிகாரம் அளிக்கும் தீர்மானத்தை அப்படியே எடுத்துக் கொண்டு போய் அமித்ஷாவின் காலடியில் சமர்ப்பித்து விட்டு, அவரின் உத்தரவுக்காகக் காத்துக் கிடக்கிறார் பழனிசாமி. விசாரணைக்கு ஆஜராக அமலாக்கத் துறையும் சி.பி.ஐ.யும் சம்மன் அனுப்புவது போல, தொகுதிப் பங்கீட்டுப் பேச்சுவார்த்தைக்கு அமித்ஷா, எடப்பாடி பழனிச்சாமியை அழைத்திருக்கிறார். அ.தி.மு.க.வும் பா.ஜ.க.வும் பரஸ்பரம் சம்மதித்து உருவான கூட்டணியா? இல்லை சம்மன் கூட்டணியா?

வார்த்தைக்கு வார்த்தை அ.தி.மு.க. தான் தலைமை என்று கூறிவிட்டு, இத்தனை முறை ஏன் டெல்லிக்கு பழனிச்சாமி செல்ல வேண்டும்? கூட்டணிக்கு அ.தி.மு.க. தலைமை என்றால், அ.தி.மு.க. விரும்பும் இடத்தில் இதுவரை தொகுதிப் பங்கீட்டுப் பேச்சுவார்த்தையே நடைபெறவில்லை. 2021 தேர்தலில் கூட அமித்ஷா சென்னை வந்து ஹோட்டலில் தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை நடத்தினார். இப்போது டெல்லிக்கு பழனிசாமி ஓடுவதற்குப் பெயர்தான் கூட்டணிக்குத் தலைமை தாங்குவதா?

**பா.ஜ.க.வின் கிளைக் கழகமா அ.தி.மு.க.?**

எடப்பாடி பழனிசாமி ஆட்சியில் இருந்த போது, அரசின் நடவடிக்கையில் பா.ஜ.க. தலையிட்டது. இப்போது அ.தி.மு.க.வின் உள்கட்சி விவகாரத்திலும் தலையிடுகிறது. தொகுதிப் பங்கீட்டைக் கூட அமித்ஷாவிடம் கேட்டுச் செய்வதற்கு பதிலாக ‘பா.ஜ.க.வின் கிளைக் கழகம்தான் அ.தி.மு.க.’ எனக் கட்சியின் பைலாவையே (Bylaws) திருத்தி விடுங்கள் பழனிசாமி!

“டெல்லி அணி - தமிழ்நாடு அணி இடையேதான் போட்டி; இதில் தமிழ்நாடு அணி வெல்லும்” என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடர்ந்து சொல்வது ஏன் என்பது இப்போது புரிகிறதா? அ.தி.மு.க. கூட்டணியின் தொகுதிப் பங்கீட்டைக் கூட டெல்லி முடிவு செய்யும் என்றால், இவர்கள் ஆட்சிக்கு வந்தால் தமிழ்நாட்டுக்கு என்ன ஆபத்து ஏற்படும் எனத் தெரிகிறதா? கட்சியையே டெல்லியில் அடமானம் வைக்கத் துணிந்த பழனிசாமி, தமிழ்நாட்டை மட்டும் விட்டு வைப்பாரா? தமிழ்நாட்டு மக்களுக்கு துரோகம் இழைப்பதும் பா.ஜ.க.விற்கு ஆயுள் அடிமையாக இருப்பதும்தான் பாதந்தாங்கி பழனிசாமிக்கு தெரிந்த ஒரே கலை! ஆட்சியில் இருந்த போது தமிழ்நாட்டின் உரிமைகளை பா.ஜ.க.வுக்குக் காவு கொடுத்த பழனிசாமி, இப்போது அ.தி.மு.க. தொண்டர்களையும் முழுமையாக அடகு வைத்துவிட்டார்.

**இந்த அவமானம் தேவையா?**

தமிழ்நாட்டில் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு அ.தி.மு.க.தான் தலைமை என பழனிசாமி போகிற இடமெல்லாம் புலம்பினாலும் அமித்ஷாவும், மோடியும் அதைப் பொருட்படுத்தவே இல்லை. பழனிசாமியை மேடையில் வைத்துக் கொண்டே ’NDA கூட்டணி ஆட்சி அமையும்’ என அவமானப்படுத்துகிறார்கள். மதுராந்தகம், மதுரை மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் நடைபெற்ற கூட்டங்களில் பிரதமர் மோடி, எடப்பாடி பழனி சாமியின் பெயரை ஒருமுறை கூட உச்சரிக்கவில்லை. இந்த அவமானம் பழனிசாமிக்கு தேவையா? மோடி, அமித்ஷா மட்டுமல்ல அவர்கள் கூட்டணியில் இணைந்திருக்கும் டி.டி.வி. தினகரன் கூட பழனிசாமியை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. இந்த லட்சணத்தில்தான் தமிழ்நாட்டில் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு அ.தி.மு.க. தலைமையாம்!

மானம் தமிழரின் உணர்வோடு கலந்தவை. அதனால்தான் மானத்தைப் பற்றி ஒரு முழு அதிகாரத்தையே எழுதியிருக்கிறார் திருவள்ளுவர்.

**மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்**
**உயிர்நீப்பர் மானம் வரின்**

என்ற குறளுக்குப் பொருள் தெரியுமா? தன் உடலில் உள்ள மயிர்க்கற்றைகளில் இருந்து ஒரு முடி நீங்கினாலும், அந்த அவமானத்தைத் தாங்க முடியாமல் உயிர்விடும் இயல்புடையது கவரிமான். தங்களுக்கு ஒரு சிறு அவமானம் அல்லது கௌரவக் குறைச்சல் ஏற்படும் சூழல் வந்தால், அந்த மானத்தைக் காப்பவனே தமிழன். மானம் என்றால் என்ன விலை? எனக் கேட்குமளவிற்கு அடிமைத்தனத்தில் ஊறிப் போயிருக்கும் பழனிசாமியை இந்தத் தேர்தலோடு தமிழ்நாட்டு மக்கள் அரசியலை விட்டே அப்புறப்படுத்தப் போவது உறுதி.

**அடிமைக் கூட்டணிக்கு – மக்கள் மரண அடி கொடுப்பார்கள்!**

இந்த அடிமைகளை வைத்துக் கொண்டு தமிழ்நாட்டில் நுழைந்துவிடலாம் எனக் கற்பனைக் குதிரையை ஓட்டிக் கொண்டிருக்கிறது பா.ஜ.க. அதன் பித்தலாட்ட நாடகத்தைத் தோலுரித்து காட்டிதான், இந்தத் தேர்தல், தமிழ்நாடு vs என்.டி.ஏ எனச் சூளுரைக்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். ”தமிழ்நாடு டெல்லிக்கு out of control” என்கிறார் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின். “டெல்லிக்கு வா பழனிசாமி” என்கிறார் அமித்ஷா. இந்த இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டைத் தமிழக மக்கள் புரிந்து கொண்டார்கள். அடிமைக் கூட்டணிக்குத் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் மரண அடி கொடுக்க காத்திருக்கிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் தமிழ்நாடு வெல்லும், திராவிட மாடல் ஆட்சி 2.0 அதைச் சொல்லும்.

இவ்வாறு கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

### இன்றும் — நாளையும்

# சிவகங்கை மாவட்டத்தில் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் சுற்றுப் பயணம்!


## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!

*சிவகங்கை, மார்ச் 21 -*

*முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் சிவகங்கை மாவட்டத்தில் நான்கு சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெறும் கூட்டங்களில் பங்கேற்கிறார்.*

*இது குறித்து சிவகங்கை மாவட்டச் செயலாளர்- அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:-*

*கழகத் தலைவர், முதல்வர் தளபதி அவர்களின் தலைமையினை ஏற்று முன்னால் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் இன்றும், நாளையும் கீழ்க்கண்டவாறு சுற்றுப் பயணம் மேற்*



*கொண்டு உரையாற்றுகிறார். அவர் சுற்றுப்பயணம் வருமாறு:-*

*21.3.2026 - சிவகங்கை சட்டமன்றத் தொகுதி இடம் - காளையார் கோவில் ஏ.எஸ். கார்டன் மஹால். காலை 9 மணி, மாலை 4 மணி திருப்பத்தூர் சட்ட மன்றத் தொகுதி. இடம் - சிங்கம்புணரி காந்திமதி மாளிகை. மாலை 6:00 மணி. காரைக்குடி சட்ட மன்றத் தொகுதி இடம். தேவகோட்டை.எஸ்.எம். ஜி.மகால். தேவகோட்டை. அன்று இரவு காரைக்குடியில் தங்குகிறார்.*

*22.3.2026-ஆம் தேதி - ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி மானாமதுரை சட்டமன்றத் தொகுதி இடம் - இளையான்குடி. எம்.எஸ். எம்.எஸ். மஹால்.*

*எனவே இந்த நான்கு சட்டமன்றத் தொகுதியில் முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் வருகை ஒட்டி அந்தந்த ஒன்றிய, நகரக் கழக, பேரூர்க் கழகச் செயலாளர்கள் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.*

---

### ஈரோடு வடக்கு மாவட்டம் – அனைத்து ஒன்றிய, நகர, பேரூர்க் கழகங்களில்

# பி.எல்.ஏ - 2 ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம் அறிக்கை!

*ஈரோடு, மார்ச் 21-*

*ஈரோடு வடக்கு மாவட்டத்தில் பி.எல்.ஏ - 2 ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம் நம்பியூர் கிழக்கு ஒன்றியம் நம்பியூர் பேரூராட்சிக்கு 20.3.2026 மாலை 4 மணிக்கு நம்பியூர் மேற்கு ஒன்றிய அலுவலகம் நம்பியூரிலும், நம்பியூர் கிழக்கு ஒன்றியம் எலத்தூர் பேரூராட்சிக்கு 20.3.2026 மாலை 5 மணிக்கு நம்பியூர் மேற்கு ஒன்றிய அலுவலகம், நம்பியூரிலும், புளியம்பட்டி நகராட்சிக்கு 20.3.2026 மாலை 6:00 மணிக்கு நகர அலுவலகம், புளியம்பட்டியிலும் நடைபெற்றது.*

*மேலும் பவானிசாகர் தெற்கு ஒன்றியம் 21.3.2026*



*காலை 9 மணிக்கு தினேஷ் தோட்டம் பொன்னம்பாளையம், நல்லூரிலும், பவானிசாகர் வடக்கு ஒன்றியம் பவானிசாகர் பேரூராட்சிக்கு 21.3.2026 காலை 10 மணிக்கு பவானிசாகர் பேரூர்க் கழக அலுவலகம், பவானிசாகரிலும், சத்தியமங்கலம் நகராட்சிக்கு 21.3.2026 பகல் 12 மணிக்கு புளியங்கோம்பு ரோடு, மொண்டி கரடு, சக்தியிலும், சக்தி வடக்கு ஒன்றியம் கே.என்.பாளையம் பேரூராட்சிக்கு 21.3.2026 மாலை 5 மணிக்கு புகையிலை குடோன், சிக்கரசம் பாளையத்திலும்,*

*சத்தி தெற்கு ஒன்றியம் அரியப்பம்பாளையம் பேரூராட்சிக்கு 21.3.2026 மாலை 6 மணிக்கு ஒன்றிய கழக செயலாளர் வீட்டிற்கு எதிரில், பூ மார்க்கெட், சத்தியிலும்,*

*டி.என்.பாளையம் தெற்கு ஒன்றியம், பெரிய கொடிவேரி பேரூராட்சி, காசிபாளையம் பேரூராட்சிக்கு 22.3.2026 காலை 9 மணிக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் இல்லம், கொங்கர் பாளையத்திலும், டி.என்.பாளையம் வடக்கு ஒன்றியம் வாணி புத்தூர் பேரூராட்சிக்கு 22.3.2026 காலை 10 மணிக்கு ஒன்றியக் கழக அலுவலகம் கள்ளிப்பட்டியிலும் நடைபெறுகிறது.*

*இந்த நிகழ்ச்சியில் பி.எல்.ஏ. 2 வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*


*இவ்வாறு ஈரோடு வடக்கு மாவட்டச் செயலாளர் என்.நல்லசிவம் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.*

---

## சென்னை கிழக்கு மாவட்டம்

# அம்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, அம்பத்தூர் வடக்கு - தெற்கு - கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள் BLA2, BDA, BYO ஆலோசனைக்கூட்டம் மற்றும் கொளத்தூர் தொகுதிக்குட்பட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்டம், அம்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, அம்பத்தூர் வடக்கு / தெற்கு/ கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள் BLA2, BDA, BYO ஆலோசனைக்கூட்டம் மற்றும் கொளத்தூர் தொகுதிக்குட்பட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் 21.3.2026, சனிக்கிழமை இன்று நடைபெறும் விவரம் பின்வருமாறு:-

| நாள் | நிகழ்ச்சி/பகுதி | இடம் |
|---|---|---|
| 21.3.2026 – சனிக்கிழமை காலை 10.00 மணி | அம்பத்தூர் வடக்கு பகுதி கழக நிர்வாகிகள் BLA2, BDA, BYO ஆலோசனைக்கூட்டம் | PSB கன்வென்ஷன் டெலிபோன் எக்சேஞ்ச் பின்புறம் அம்பத்தூர் தொழிற்பேட்டை |
| 21.3.2026 – சனிக்கிழமை மாலை 5.00 மணி | கொளத்தூர் தொகுதிக்குட்பட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் | திருவள்ளுவர் திருமண மண்டபம், பெரியார் நகர், கொளத்தூர். |
| 21.3.2026 – சனிக்கிழமை மாலை 6.00 மணி | அம்பத்தூர் தெற்கு பகுதி கழக நிர்வாகிகள் BLA2, BDA, BYO ஆலோசனைக்கூட்டம் | கிரண் பேலஸ் TNHB காலனி, கொரட்டூர், |
| 21.3.2026 – சனிக்கிழமை மாலை 7.00 மணி | அம்பத்தூர் கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள் BLA2, BDA, BYO ஆலோசனைக்கூட்டம் | ஸ்ரீ ரங்கா மஹால், விவேகானந்தர் நகர், கொளத்தூர். |

மேற்கண்ட ஆலோசனை கூட்டங்களில் அந்தந்த பகுதி மற்றும் தொகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

---






தேனி தெற்கு மாவட்டம், ஆண்டிப்பட்டி தொகுதி கடமலை மயிலை ஒன்றியம் சார்பாக கடமலைக்குண்டு தனியார் மண்டபத்தில் ‘ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும்’ தமிழ்நாடு தலை குனியாது தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் முன்னிலை வகித்தார். கடமலை மயிலை ஒன்றியச் செயலாளர்கள் வழக்கறிஞர் சுப்பிரமணி, தங்கபாண்டி ஆகியோர் வரவேற்புரையாற்றினர். முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார். மாநில தேர்தல் பணி குழுச் செயலாளர் கம்பம் செல்வேந்திரன், மாநில கழக தீர்மானக் குழு இணைச் செயலாளர் ஜெயக்குமார், மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் பாண்டியன், மாநில தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆசையன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பிரபாகரன், ஒன்றிய துணைச் செயலாளர் தேசிங்கு ராஜன் மற்றும் கழக நிர்வாகிகள், மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.